பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 18 திங்கட்கிழமை 04.10.2021 கதிர் 197

## நாடு திரும்பினார் ஜனாதிபதி கோட்டா

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்குச்சென்றிருந்தஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ இன்று காலை நாடு திரும்பினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்றிருந்தது.

☞2

## தடுப்பூசி பெற்றவர்களுக்கு மட்டுமே பிரதேச செயலகத்தினுள் அனுமதி!

### விளக்கம் கோரியுள்ளது மனித உரிமை ஆணைக்குழு



(ந.லோகதயாளன்)

வவுனியா பிரதேச செயலகத்தினுள் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலக வாயிலில் அது தொடர்பான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தினுள் சேவை

☞2

## ‘தாத்தா’வாக ஜனாதிபதி! பேத்தியுடன் ஒளிப்படம்!!



எனது பேத்தியை முதன்முறையாக நான் தொட்டுத் தூக்கி அணைத்த அந்தத் தருணம் என்னைமெய்சிலிர்க்க வைத்தது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

☞2

### பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த

## பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவரும் கைது

(எஸ்.நிதர்ஷன்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் மற்றும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊரெழு பகுதியில் நேற்றிரவு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்துள்ளனர்.

அவர்களை வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்டபோது அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண்பட்டார்.

அவரது நடவடிக்கை எல்லை

☞2

## அம்பன்பொலவில் கிராமசேவகர் கொடூரமாக வெட்டிப் படுகொலை

அநுராதபுரம் மாவட்டம், அம்பன்பொல தெற்கு கிராம உத்தியோகத்தர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு இன்று கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றிய எஸ்.எம். கபில பிரியந்த என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கிராம உத்தியோகத்தரை, காரில் பயணித்த சிலர் தாக்கிவிட்டு தப்பிச்சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

காரின் இலக்கத்தகடு அடை

☞2

## ரிஷாத் எம்.பியை உடன் விடுவிக்குக!

### சபையில் ரணில் வலியுறுத்து



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சாட்சியங்கள் இல்லாவிட்டால் அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

☞2

## ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 12 பேர் உட்பட 15 பேருக்குக் கொரோனா

### வவுனியாவில் மேலும் ஒருவர் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் 12 பேர் உட்பட 15 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

☞2

## சட்டவிதிகளை மீறிய மேலும் 95 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 95 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 79 ஆயிரத்து 945ஆக உயர்வடைந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல்

☞2

## கொரோனாத் தொற்றுக்குள்ளானோருக்கு ஏற்படும் 9 விதமான நோய்கள் அடையாளம்

### விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர தகவல்



கொரோனாத் தொற்றுக்குள்ளாகும் நபர்களுக்கு 3 மாதங்கள் முதல் 6 மாதங்கள் வரையான காலப் பகுதிக்குள் ஏற்படும் 9 விதமான நீண்ட கால நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நோய் எதிர்ப்பு, ஒவ்வாமை பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

சிரமமாக மூச்சு எடுத்தல், வயிற்று நோய் அறிகுறிகள், மன

☞2

## ரிஷாத் எம்.பியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்தில் இன்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சாட்சியங்கள் இருந்தால் அவற்றை முன்வைத்து, வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தடுத்து வைத்திருப்பதென்றால், அவருக்கு எதிராக குற்றச்சாட்டு இருக்க வேண்டும். இது ரிஷாத் பதியுதீன் பிரச்சினை மாத்திரமன்றி நாடாளுமன்றத்தின் பிரச்சினையாகும்.

ரிஷாத் மீதான சாட்சியங்களை முன்வைக்க முடியுமா? இல்லையா? என்பதை சபாநாயர், சட்டமா அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பிக் கேட்க வேண்டும்ர.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக சாட்சியங்கள் இருக்குமாயின் அதனை முன்வைத்து வழக்கைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுங்கள். சாட்சி இல்லையென்றால் உடனடியாக அவரை விடுவிக்கவும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் உறுப்பினர், இப்போது வழக்கொன்றின் விசாரணையில் தலையீடு செய்தது தொடர்பிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதற்கான சாட்சி இருந்தால், அதனையும் முன்வைக்க வேண்டும்.

எம்.பி. ஒருவர் வழக்கொன்றில் தலையிட்டால் அது பிரதான பிரச்சினையாகும். எனினும், குறித்த வழக்கு தொடர்பான சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் எம்.பி. தடுப்புக் காவலில் இருந்துள்ளார். அப்படி அவர் தொடர்பில் சாட்சியங்கள் இருந்தால், அவற்றையும் முன்வைக்க வேண்டும் - என்றார்.

## கொரோனாத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழுத்தம், நெஞ்சு மற்றும் தொண்டை வலி, அறிவாற்றல் பிரச்சினைகள், சோர்வு, தலைவலி, தசை வலி மற்றும் ஏனைய வலிகள் என 9 விதமான நோய் அறிகுறிகளை அவர் பட்டியலிட்டுள்ளார்.

இந்த நோய் அறிகுறிகளில் மன அழுத்தமானது 15 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிரமமாக மூச்சு எடுத்தல் :- 8%
வயிற்று நோய் அறிகுறிகள் :- 8%
மன அழுத்தம் :- 15%
நெஞ்சு மற்றும் தொண்டை வலி:-6%
அறிவாற்றல் பிரச்சினைகள் :- 4%
சோர்வு :-6%
தலைவலி :- 5%
தசை வலி :- 1.5 %
ஏனைய வலிகள் :- 7%

இந்த நோய் அறிகுறிகளுக்கு உள்ளாவோரில் பெண்களே அதிகம் என்றும் விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர மேலும் கூறியுள்ளார்.

## அம்பன்பொலவில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாளம் காணப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## சட்டவிதிகளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 86 வாகனங்களில் வந்த 163 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## நாடு திரும்பினார்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து, இன்று காலை 8.55மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

## ஆடைத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத்தில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 15 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் ஒருவர் மரணமடைந்துள்ளார். தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஆண் (வயது 59) ஒருவரே மரணமடைந்தவராவார்.

அவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## பிரதேச சபை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீறிச் சென்றதனால் பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவை சூடு நடத்தி எச்சரித்தார். அதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவரையும் தமது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் எனும் குற்றச்சாட்டில் பொலிஸார் இன்று காலை கைதுசெய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரதேசசபை உறுப்பினர் தன்னை ஈ.பி.டி.பி. கட்சி என அறி முகப்படுத்தி பல தடவைகள் பொலிஸாருடன் முரண்பட்டு கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று பொலிஸார் கூறினர்.

## 'தாத்தா'வாக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் தனது முகநூலில், பேத்தியுடன் எடுத்துக் கொண்ட ஒளிப்படத்துடன் இட்டுள்ள பதிவு வருமாறு:-

அண்மையில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நான் அமெரிக்கா சென்றபோதுதான் எனது பேத்தியை முதன்முறையாக நேரில் பார்க்கும் பேருவகை தந்த பாக்கியத்தைப் பெற்றேன்.

எனது மகன் மனோஜ் மற்றும் மருமகள் செவ்வந்தி ஆகியோர் பெற்றோர் என்ற ஸ்தானத்தை அடைந்தமைக்கு அவர்களை நேரில் வாழ்த்தியதோடு -'தாத்தா' என்ற ஸ்தானத்தை எனக்குத் தந்தமைக்கு எனது நன்றியையும் கூறினேன் - என்றுள்ளது.

## தடுப்பூசி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற வருவோர் அடையாள அட்டையையும் , தடுப்பூசி அட்டையையும் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்றும், தடுப்பூசிபெற்றுக்கொள்ளாதோர் பிரதேச செயலகத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் குறித்து சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பில் வவுனியா பிரதேச செயலாளரிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு மாகாண இணைப்பாளர் த.கனகராஜ் எழுத்து மூலமான விளக்கம் கோரியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியப் பிரதிநிதியின் வருகை

இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவின் இலங்கை விஜயம் – குறிப்பாக திருகோணமலை, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கும் விசேட மாக அவர் மேற்கொண்ட விஜயம் – இந்தச் சமயத்தில் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் இந்தியாவின் முக்கிய ஈடுபாடுகள், ஆர்வங்கள் குறித்து அவர் விசேட கவனம் செலுத்தினார் என்று தெரிகின்றது.

கடந்த ஜனவரியில் வெளிவிவகாரச் செயலாளர் பதவியை ஏற்ற ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவுக்கு இது முதல் விஜயம் என்றாலும் அவருக்கு இலங்கை விடயம் புதிதல்ல. முன்னைய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின் போது இந்தியவெளிவிகாரஅமைச்சில்இலங்கைவிடயங்களைக் கையாளும் இணைச் செயலாளராக இருந்தவர் அவர்.

ஐ.நா. பொதுச் சபை அமர்வில் பங்குபற்றுவதற்காக கடந்த மாதம் இலங்கை – இந்தியத் தலைவர்கள் அமெரிக்கா சென்று இருந்தனர். அச்சமயம் இரு தலைவர்களும் சந்தித்துப் பேசவில்லை. ஆயினும் இருநாட்டு வெளிவிகார அமைச்சர்களும் –ஜெய்சங்கரும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் –சந்தித்து விரிவாக கலந்துரையாடியுள்ளனர். அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சரினால் சுட்டப்பட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கை வந்தார் எனத் தெரிகின்றது.

அவரது இலங்கை வருகையை ஒட்டிப் பல விடயங்கள் பேசப்பட்டன என்று தகவல்கள் வெளிவந்தாலும், மிக முக்கியமான பல விவகாரங்களையும் அவர் சத்தம் சந்தடியின்றிக் கையாண்டார் எனவும் கூறப்படுகின்றது.

திருகோணமலையில், இலங்கை – இந்திய உடன்பாட்டை ஒட்டி இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டு இருக்கும் எண்ணெய்த் தாங்கிகளை அவர் நேரில் சென்று பார்வையிட்டார். அந்த தாங்கிகள் பிறிதொரு நாட்டுக்கு வழங்கப்படலாம் என்று பேச்சு அடிபடுகிறது. அதன் உரித்து மீதான இந்தியாவின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் அவரது திருகோணமலை விஜயம் அமைந்தது.

அடுத்து யாழ்ப்பாணத்தில் இந்திய உதவித் திட்டத்துடன் கட்டப்பட்ட கலாச்சார மண்டபத்தை தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு இயக்குவதற்கான உதவிகளை இந்தியா வழங்குவது பற்றி அவர் அறிவித்தார். அது மாத்திரமல்லாமல், இலங்கைத் தமிழர்கள் நீதி, நியாயமான தங்களது அபிலாஷைகளை அடைவதற்கு இந்தியா உதவியாக இருக்கும் என்ற அரசியல் நிலைப்பாட்டையும் அவர் யாழ்ப்பாணத்தில் பேசினார்.

இவை எல்லாவற்றையும் தாண்டி பலாலி சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவது தொடர்பான திட்டத்திற்கு முழு உதவிகளை இலவசமாக வழங்குவதற்காக நிதி ஒதுக்கி பாரதம் காத்திருக்கையில், அது தாமதமாகி கொண்டிருப்பதற்கான காரணங்களை பலாலி விமான நிலையத்திலேயே நேரடியாக ஆராய்ந்து இருக்கின்றார் இந்திய வெளிவிவகாரச் செயலாளர். சம்பந்தப்பட்ட வரைபடங்கள், குறிப்புகளை எல்லாம் எடுத்து வைத்து விவரமாக – விளக்கமாக – அதிகாரிகளுடன் அவர் உரையாடினார் என கூறப்படுகின்றது. அந்தத் திட்டம் இனியும் தாமதிக்காமல் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி இருக்கிறார்.

அதேபோன்று காங்கேசன்துறை துறைமுகத்தை விருத்தி செய்து அதனூடான வர்த்தகத்தை மேம்படுத்தும் திட்டம் தாமதமாவது குறித்தும், அதற்கான தடைகளை நீக்குவது பற்றியும் கூட இந்திய வெளிவிகாரச் செயலாளர் யாழ்ப்பாணத்தில் ஆராய்ந்தார் என தெரிகின்றது.

இன்று மாலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கிறார். வெளிவிவகார செயலாளர் தமது இலங்கை வருகையின் போது வெறும் அரசியல் மட்டும் பேசவில்லை. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருப்பது போல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களிலும் அவர் சிரத்தை செலுத்தியிருக்கின்றார் என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

# தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வடக்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு



வடமாகாண ஆசிரி–யர்கள், தொடர்ந்தும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குகிறோம் என அறிவித்துள்ளனர். வடமாகாணத்தின் யாழ்ப்பாண பணிமனையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் வேதனப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாது, தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, வடமாகாணத்தில் முழுமையாக நிகழ்நிலைக் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தமையை மறுக்கும் முகமாகவே இந்த ஊடக சந்திப்பு நடத்தப்பட் டுள் ளது.

அமைச்சரின் இந்த கருத்தின் மூலம் இனவாதத்தைத் தூண்டி மக்கள் மத்தியிலும், ஆசிரி–யர்கள் மத்தியிலும் குழப்பத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று ஊடக சந்திப்பில் பங்கேற்ற ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 6ஆம் திகதி ஆசிரியர் தினத்தன்று வடமாகாணத்தின் சகல கோட்ட மட்டத்திலும் ஆசிரியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன என அவர்கள் அறிவித்துள்ளனர். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண செயலாளர் புயல் நேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் யாழ்ப்பாண வலய செயலாளர் குலேந்திரன் வெள்வின், கிளிநொச்சிவலயக்கல்விசெயலாளர் பொன்னுத்துரை காண்டீபன், மாவட்ட பிரதிநிதி பரமசிவம் கஜமுகன் போன்றோர் கலந்து கொண்டுள்ளனர்.

# வன்னி மாவட்ட பெரமுன முக்கியஸ்தர்கள் இடையில் நேந்று விசேட கலந்துரையாடல்



வன்னி மாவட்ட பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகரட்ணம், சுமதிபால மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த காதர் மஸ்தான் – கிராமத்துடனான கலந்துரையாடல் ஊடாக அந்தப்பகுதியின் தேவைப்பாடுகளை மக்களூடாக அறிந்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான அறிவுரைகள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளுக்கும் 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் வெற்றிபெற்ற வட்டார உறுப்பினர்களுக்கு 40 லட்சம் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு 2 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கான அபிவிருத்திகளை சரியான முறையில் வழங்குவதற்கான ஆலோசனைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் – எழுதுமட்டுவாழில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

யாழ்ப்பாணம் - தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 820 லீற்றர் கோடாவும், உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

உதவி மதுவரி ஆணையாளர் தர்மசீலன், மதுவரி அத்தியட்சகர் தங்கராசா ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய நிலைய பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையிலான மதுவரி உத்தியோகத்தர்கள் நேற்று மாலை திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டனர்.

இதன்போதே கோடாவும், உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சீன எல்லையில் தற்கொலைப் படையை நிறுத்துவதற்குத் தலிபான்கள் திட்டம்

அண்டை நாடுகளுடனான எல்லையில் தற்கொலைப் படையை நிறுத்த தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர் . குறிப்பாக, படாக்ஷான் மாகாணத்தை ஒட்டிய எல்லையில் இந்தப் படைகள் நிலைநிறுத்தப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

படாக்ஷான் மாகாணத்தை ஒட்டி தஜிகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் உள்ளன.

இது குறித்து ஆப்கானின் காமா ஊடகத்துக்குப் பேட்டியளித்துள்ள படாக்ஷான் மாகாண ஆளுநர் முல்லா நிசார் அஹமதி அளித்த பேட்டியில், படாக்ஷான் மாகாணத்தில் சீனா, தஜிகிஸ்தான் ஒட்டிய எல்லைப் பகுதியில் தற்கொலைப் படை நிலைநிறுத்தப்படும். வடகிழக்குப் பகுதியில் இவர்கள் நிறுத்தப்படுவார்கள். இந்தப் படைக்கு லஷ்கர் இ மன்சூரி என்று பெயர் சூட்டியுள்ளோம்.

முதற்கட்டமாக படாக்ஷானில் பணியமர்த்தப்படும் இவர்கள் படிப்படியாக நாட்டின் அனைத்து எல்லைகளிலும் நிறுத்தப்படுவார்கள்.

இந்தத் தற்கொலைப் படையினர் மட்டும் இல்லாவிட்டால் ஆப்கனில் இருந்து அமெரிக்கப் படைகளை விரட்டியது சாத்தியமாகி இருக்காது. இவர்கள் துணிச்சலுடன் வெடிப்பொருள் நிறைந்த கோட்டை அணிந்து கொண்டு ஆப்கானில் இருந்த அமெரிக்க தளங்களைத் தாக்கி ஒழித்த வீரர்கள்.

இவர்களுக்கு பயமென்பதே கிடையாது. அல்லாவுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்று கூறினார்.

லஷ்கர் இ மன்சூரி தலிபான்களின் தற்கொலைப் படையென்றால், பத்ரி 313 என்பது தலிபான்களின் மற்றொரு பலம் வாய்ந்த படையாகக் கருதப்படுகிறது. அதிநவீன ஆயுதங்களை சர்வ சாதாரணமாக இயக்கக் கூடிய பத்ரி 313 படையினர் தற்போது காபூல் சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்

# 38 சீன விமானங்கள் நுழைந்தன தாய்வான் பாதுகாப்பு மண்டலத்தில்

தங்கள் வான் பாதுகாப்பு மண்டலத்தில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று சீனாவின் 38 படை விமானங்கள் அத்துமீறிப் பறந்தன எனத் தாய்வான் கூறியுள்ளது. இதுவரை சீனா மேற்கொண்டவற்றிலேயே மிகப்பெரிய ஊடுவல் இது என்றும் குறிப்பிட்டுள்ளது தாய்வான்.




அணு ஆயுதங்களை ஏவும் திறன் கொண்ட விமானங்கள் உள்ளிட்ட சீனப் பாதுகாப்புப் படை விமானங்கள் தாய்வான் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் இரு அலைகளாக பறந்தன என அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

வான் பாதுகாப்பு அடையாள மண்டலம் என்பது ஒரு நாட்டின் நிலப்பகுதிக்கும், அந்நாட்டின் வான்பகுதிக்கும் வெளியே உள்ள பகுதி. ஆனால் நாட்டின் பாதுகாப்பு கருதி, அப்பகுதிக்குள் வரும் வெளிநாட்டு விமானங்கள் அடையாளப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படும்.

அப்பகுதி தாய்வான் தானே அறிவித்துக் கொண்ட ஒன்று. விதிமுறைப்படி பார்த்தால் அப்பகுதி ஒரு சர்வதேச வான் பகுதியாகத்தான் இருக்கிறது.

சீனப் பாதுகாப்புப் படை விமானங்கள் தங்கள் வான் பாதுகாப்பு மண்டலத்தில் நுழைந்ததற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் தங்கள் படை விமானங்களையும், ஏவுகணை அமைப்புகளையும் உடனடியாக பறக்கவிட உத்தரவிட்டது தாய்வான்.

தாய்வான் தனது மாகாணங்களில் ஒன்று என்று பார்க்கிறது சீனா. ஆனால் தாய்வானோ தன்னை ஒரு தனி நாடாக கருதுகிறது.

கிட்டத்தட்ட ஓராண்டு காலமாகவே சீனப் படை விமானங்கள், தாய்வானுக்கு அருகில் வந்து அச்சுறுத்துகின்றன என தாய்வான் தொடர்ந்து புகார் கூறி வருகிறது.

சீனா தொடர்ந்து படை ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுவது, அப்பிராந்தியத்தின் அமைதியை குலைக்கிறது என தாய்வானின் பிரீமியர் சுட்செங் சங் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சீனா இதுவரை பொதுவெளியில் எதையும் கூறவில்லை.

இதுபோன்ற படை நடவடிக்கைகள் தன் இறையாண்மையைப் பாதுகாக்கவும், தாய்வான் மற்றும் அமெரிக்க கூட்டுச்சதியை இலக்கு வைக்கவும் நடத்தப்படுவதாக இதற்கு முன் கூறியுள்ளது சீனா.

சீன இராணுவத்தின் 25 விமானங்கள், பகல் நேரத்தில் தாய்வானின் ப்ராடாஸ் தீவின் பவளப்பாறை பகுதிக்கு அருகில், தென் மேற்கு வான்பாதுகாப்பு எல்லைப் பகுதிக்குள் நுழைந்தன என, தாய்வானின் பாதுகாப்பு அமைச்சக செய்தியறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 13 சீன இராணுவ விமானங்கள் அதே பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்வானுக்கு நடுவில் பறந்தன

இதை தன் டுவிட்டர் பக்கத்திலும் பதிவிட்டுள்ளது தாய்வானின் பாதுகாப்பு அமைச்சகம்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட சீனாவின் படை விமானங்களில் அணு ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தக் கூடிய ர்-6 விமானங்களும் அடக்கம் என்று அவ்வமைச்சகம் கூறியுள்ளது.

தாய்வான் கூறும் அரசியல் கருத்துக்களுக்கு அவ்வப்போது சீனா இப்படிப்பட்ட விடயங்களைச் செய்து தன் அதிருப்தியை வெளிப்படுத்தும். ஆனால் இந்த முறை சீனா தாய்வான் வான் பாதுகாப்பு எல்லைக்குள் நுழைய எது காரணமாக அமைந்தது என்று தெரியவில்லை.

1940-களில் ஓர் உள்நாட்டுப் போரின்போது தாய்வான் மற்றும் சீனா பிரிந்தன. சீனாவோ ஏதோ ஒரு கட்டத்தில், தேவைப்பட்டால் இராணுவத்தைப் பயன்படுத்தியேனும் தாய்வானை கைப்பற்றுவோம் எனகூறிவருகிறது. தாய்வானுக்கு என்று தனி அரசமைப்புச் சட்டமும், ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும், 3 லட்சம் பேர் கொண்ட இராணுவமும் உள்ளது.

தாய்வான் நாட்டை சில நாடுகள் மட்டுமே ஆதரிக்கின்றன. பல நாடுகள் பெய்ஜிங்கில் இருக்கும் சீன அரசை அங்கீகரிக்கின்றன. அமெரிக்காவுக்கு தாய்வானுடன் எந்த வித அதிகாரபூர்வ தொடர்பும் இல்லை, ஆனால் தாய்வான் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளத் தேவையான உதவிகளை அமெரிக்கா செய்ய வேண்டும் என ஒரு சட்டம் இருக்கிறது.




# கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி ஒக்லாந்து நகரில் போராட்டம்

நியூசிலாந்தில் இன்று 27 பேருக்கு டெல்டா வகைக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் ஒக்லாந்து நகரில் கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி ஆயிரத்திற்கும் அதிகமானோர் இன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

சுமார் 2 மாதங்களாக அந்நகரில் முடக்கநிலை அமுலில் உள்ள நிலையில் முடக்கநிலை நீடிக்கப்படுமா என்பது பற்றி எதிர்வரும் திங்கட்கிழமை முடிவு எட்டப்படும் என கூறப்படுகிறது.

அக்லாந்தில் அண்மைக்காலமாக நாள்தோறும் சராசரியாக 8 முதல் 45 நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்ற நிலையில் வெல்லிங்டன், கிரைஸ்ட்சர்ச் ஆகிய பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நியூசிலாந்தில் 46 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளமை காரணமாக கட்டுப்பாடுகள் நீக்கப்படும் என அந்நாட்டுப் பிரதமர் தெரிவித்துள்ளார்.




# இத்தாலியில் விழுந்து நொறுங்கிய ஜெட் விமானம்; 8 பேர் பரிதாபச் சாவு

இத்தாலியிலுள்ள மிலன் நகரில் தனியாருக்குச் சொந்தமான சிறிய ஜெட் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் அதில் பயணித்த எட்டு பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விமானம் ஆளில்லாத கட்டடம் ஒன்றின் மீது விழுந்து நொறுங்கியது.

மிலனின் உள்ள விமான நிலையத்தில் இருந்து புறப்பட அந்த விமானம் சர்தீனியா தீவை நோக்கி பயணித்தைத் தொடங்கியது. ஆனால் புறப்பட சற்று நேரத்திலேயே மிலன் நகரின் புறநகர் பகுதியில் கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விமானம் கீழே விழுந்த போது பெரிய வெடிப்பு சத்தம் கேட்டதாகவும் அது இரண்டு அடுக்கு மாடி அலுவலக கட்டடம் மீது ஒன்றின் மீது விழுந்து தீப்பிடித்து எரிந்தது என்றும் அந்த விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகிறார்கள். விபத்துக்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் ஒரு சிறுவனும் அடக்கம் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விமானம் விழுந்து நொறுங்கிய பொழுது தரையில் இருந்த யாருக்கும் காயம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரய் அரசு தொலைக்காட்சி உயிரிழந்தவர்கள் அனைவரும் பிரான்ஸ் நாட்டவர்கள் என்று தெரிவித்துள்ளது. ஆனால் இந்தத் தகவலை இத்தாலிய அதிகாரிகள் இன்னும் உறுதி செய்யவில்லை.

சான் டோனாடோ மிலானீஸ் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நடந்த இந்த விபத்தில் அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பல கார்கள் தீக்கிரையாகின என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாடுகளில் சொத்துகளைப் பதுக்கிய 300 இந்திய பிரபலங்கள் ஆய்வில் அம்பலம்





இந்தியாவைச் சேர்ந்த 300க்கும் அதிகமான முக்கிய பிரபலங்கள் வெளிநாடுகளில் சொத்துக்களை பதுக்கி வைத்திருக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

பிபிசி, த கார்டியன், தி இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட உலகின்150ஊடகநிறுவனங்கள் அடங்கிய புலனாய்வு பத்திரிகையாளர் அமைப்பு, PANDORA பேப்பர்ஸ் என்ற தலைப்பில் ஆய்வுமுடிவுகளைவெளியிட்டுள்ளது. சுமார் 1.2 கோடி ஆவணங்களைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் இந்தியாவைச் சேர்ந்த முன்னாள் எம்.பிக்கள், தொழிலதிபர்கள், முன்னாள் நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் உட்பட300க்கும்அதிகமானோர் வெளிநாடுகளில் சொத்துகளை பதுக்கியமைதெரியவந்திருப்பதாக அந்த அமைப்பின் அறிக்கை கூறுகின்றது. பொப் பாடகி கிரா, ஜோர்தான் மன்னர், கென்யா, உக்ரைன் நாட்டின் அதிபர்கள், முன்னாள் பிரிட்டன் பிரதமர் டொனி பிளெயர், இலங்கையின் முன்னாள் அமைச்சர் உள்ளிட்டோரும் சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளில் சொத்துக்களைக் குவித்திருக்கின்றனர் என சர்வதேச புலனாய்வுப்பத்திரிகையாளர்அமைப்பின் ஆய்வு முடிவு களின்படி குற்றஞ்சாட்டப்படுகிறது. புகாருக்கு ஆளான பலரும், வெளிப்படையான முறையிலேயே வெளிநாடுகளில் தாம் சொத்துக்களை வாங்கியிருக்கிறோம் என விளக்கமளித்துவருகின்றனர்.

## உல்லாசக் கப்பலில் போதைப்பொருள் விருந்து நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன்கான் கைது



மும்பையில் உல்லாசக் கப்பலொன்றில் நடந்த விருந்தில் போதை மருந்துகள் பயன்படுத்தினர்எனஅடையாளம்காணப்பட்ட 13 பேரிடம் இந்திய போதை மருந்துத் தடுப்பு பிரிவு விசாரணை நடத்தியது. சுமார் 20 மணிநேர விசாரணைக்குப் பின்னர் பிரபல ஹிந்தித் திரை நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன்கான் உள்ளிட்டோரை மும்பை பொலிஸ் கைது செய்துள்ளது.

குறித்த எம்பிரஸ் உல்லாசக் கப்பலில் நடக்கும் விருந்துகளில் போதை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன எனக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, பயணிகளுடன் பயணிகளாக போதைப் பொருள்தடுப்புப்பிரிவினர்உள்ளே சென்று அங்கு தேடுதலை நடத்தி, போதைப்பொருள்களைப் பறிமுதல் செய்துள்ளனர். அந்த சொகுசுக்கப்பலில் நடந்த விருந்தில் கொக்கைன் உள்ளிட்ட போதைப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உத்தரப் பிரதேச வன்முறையில் பாதிக்கப்பட்டோரை சந்திக்க அரசியல் பிரமுகர்களுக்கு அனுமதி மறுப்பு

உத்தரப்பிரதேசத்தில்லகிம்பூர் கேரி மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 9 பேர் பலியாகினர். உத்தரப் பிரதேசத்தில் பெரும் கொந்தளிப்பை இந்த சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

லகிம்பூர் வன்முறையில் உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்துக்கு ஆறுதல் கூற காங்கிரஸின் பிரியங்கா காந்தி நேற்றிரவு விமானத்தில் அங்கு பயணமாகியிருந்தார்.

பின்னர் அங்கிருந்து காரில் லகிம்பூர் மாவட்டம் சென்ற அவரை பன்வீர் கிராமத்திற்குள் நுழைய அனுமதிக்காமல் எல்லையிலேயே பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதேபோல், சத்தீஷ்கர் முதல் மந்திரி பூபேஷ் பாகெல் மற்றும் பஞ்சாப் துணை முதல் மந்திரி எஸ்.எஸ் ராந்த்வா ஆகியோரும் லக்னோ விமான நிலையத்தில் தரையிறங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் வன்முறையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூற உத்தரப் பிரதேச முன்னாள் முதலமைச்சரான அகிலேஷ் யாதவ் அங்கு செல்லவிருந்த நிலையில், அவர் வீட்டை விட்டு வெளியே செல்ல பொலிஸார் அனுமதி மறுத்தனர். இதனால், தனது வீட்டிற்கு முன்பாக சாலையில் அமர்ந்து அகிலேஷ் யாதவ் தர்ணாவில் ஈடுபட்டார்.







## உத்தரப்பிரதேச வன்முறையில் 9 பேர் உயிரிழப்பு

# மத்திய அமைச்சரின் மகன் மீது கொலை வழக்குப்பதிவு

உத்தரப்பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ராவின் மகன் மீது கொலை வழக்கு பதியப்பட்டுள்ளது. மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ராவின் சொந்த ஊரான உத்தரப்பிரதேசம் மாநிலம் லக்கிம்பூர் கேரிக்கு அருகே உள்ள திக்குனியாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றுக்கு மாநில துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா சிறப்பு விருந்தினராக பங்கேற்கவிருந்தார். இதனையறிந்த விவசாயிகள் சங்கத்தினர், புதிய வேளாண் சட்டங்களை ரத்துச் செய்யக்கோரி அவருக்கு கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகத் திரண்டனர்.

துணை முதல்வரை வரவேற்க மத்திய அமைச்சரின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா தனது காரில் சென்றபோது அவரது காரையும் மறித்து காரின் முன் திரண்டு விவசாயிகள் கோங்கள் எழுப்பினர் எனக் கூறப்படுகிறது. அப்போது அவர்களை இடித்துத் தள்ளியபடி காரை அங்கிருந்து ஆஷிஷ் மிஸ்ரா எடுத்துச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதில் விவசாயிகள் 4 பேர் உயிரிழந்தனர் என சம்யுக்தா கிசான் மோர்ச்சா தெரிவித்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் ஆஷிஷ் மிஸ்ராவின் காரை அடித்து நொறுக்கியதோடு தீயிட்டும் கொளுத்தியுள்ளனர். இச்சம்பவத்தால் லக்கிம்பூரில் கடும் பதற்றம் நிலவியது. இதையடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்களை கலைத்தபோது வன்முறை வெடித்தது. இந்தச் சம்பவத்தில் லக்கிம்பூரில் கார் மோதி 4 விவசாயிகளும், தொடர்ந்து நடைபெற்ற வன்முறை மோதலில் 5 பேரும் என மொத்தம் 9 பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா உள்பட 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அஜய் மிஸ்ரா மகன் ஆஷிஸ் மிஸ்ரா மகன் மீது கொலை வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனிடையே சம்பவம் நடந்த இடத்தில் தனது மகன் இல்லை என்பதற்கான வீடியோ ஆதாரம் உள்ளது என்று மத்திய இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா கூறியுள்ளார். இச்சம்பவம் குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தப்படும் என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உறுதியளித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருகோணமலையில் உள்ள இந்திய எண்ணெய் நிறுவனத்தின் முனையத்தை பார்வையிட்ட இந்திய வெளியுறவு செயலாளர்




திருகோணமலையில் உள்ள இந்திய எண்ணெய் நிறுவனத்தின் முனையத்தை பார்வையிடுவதற்காக இந்திய வெளியுறவு செயலாளர் நேற்று முற்பகல் அங்கு சென்றார்.

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் புதிய உற்பத்தியொன்றை வெளியிட்டு வைத்த அவர், பின்னர் எண்ணெய் குதங்களையும் பார்வையிட்டார்.

எண்ணெய் குதங்களின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் வெளியுறவுத் துறை செயலாளர் ஆராய்ந்தார் என இலங்கைக்கான இந்திய உயர் தூதரகம் டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்திய இலங்கை எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இயலுமை தொடர்பில் இந்திய எண்ணெய் நிறுவனம் இதன்போது வெளியுறவுத்துறை செயலாளரை தெளிவுபடுத்தியதாகவும் அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய எண்ணெய் நிறுவனம் பயன்படுத்தும் சுமார் 20 எண்ணெய்க் குதங்கள் திருகோணமலையில் அமைந்துள்ளன. குறித்த எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள பகுதியை கண்காணித்த வெளியுறவுத்துறை செயலாளர் உள்ளிட்ட குழுவினர் ஏனைய குதங்கள் அமைந்துள்ள பகுதியூடாகவே அங்கிருந்து வெளியேறினர்.

இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நேற்றிரவு இலங்கை வந்தடைந்ததுடன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவரை வரவேற்றார். நேற்று முற்பகல் 9.10 அளவில் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர், விமானப் படைக்கு சொந்தமான ஹெலிகொப்டரில் கண்டிக்கு சென்றார். பின்னர் தலதா மாளிகையில் அவர் வழிபாடு களில் ஈடுபட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டவர்களும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர். நினைவுச் சின்னங்களும் இதன்போது பரிமாறப்பட்டன. இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் கண்டியிலிருந்து முற்பகல் 10.10 அளவில் திருகோணமலைக்கு புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை, இந்திய எண்ணெய் நிறுவனத்துடனான உன்படிக்கையை புதுப்பிப்பது தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் .பீரிஸ் அநுராதபுரத்தில் தெரிவித்தார்.

ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2024 ஆம் ஆண்டளவில் முடிவிற்கு வரவுள்ளது. இதனிடையே, நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் யாழ். கலாசார மத்திய நிலையத்தை பார்வையிட்டார். இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

# அரசாங்கத்தின் பசளை திட்டத்தால் விவசாயமும் விவசாயிகளும் ஆபத்தில்

அகில இலங்கை ம.கா. கொள்கை பரப்புச் செயலாளர் ஹஸ்பர் ஏ ஹலீம்

அரசாங்கத்தின் புதிய பசளை திட்டத்தினால் விவசாயமும் விவசாயிகளும் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி இருக்கின்றார்கள் என கிண்ணியா நகரசபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முதல் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமானஎம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு வழங்கிய கருத்திலையே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் இரசாயன பச்ளையை வழங்கிவந்த அரசாங்கம் இரசாயன பசளையை நிறுத்தி சேதனப் பசளை திட்டத்தினை முன்மொழிந்திருக்கிறது.

சேதனப் பசளையை தயாரிப்பதற்கான போதிய வாய்ப்புகள் நாட்டில் இல்லாமையினால் அரசானது பசளையை சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தது.

சீனாவின் சேதனப் பசளை உரிய தராதரத்தில் இல்லாமையினால் மீண்டும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு முயற்சிப்பதாக அமைச்சர் ஒருவர் நேற்று தெரிவித்துள்ளார்.

ஒழுங்கான திட்டமிடல் இன்றி அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான காலதாமதமான செயற்பாடுகள் காரணமாக உரிய வேளைக்கு பசளையை வழங்க முடியாமல் போயுள்ளது.



நிலத்தைப் பண்படுத்துகின்றபோது பயன்படுத்தப்பட வேண்டிய சேதனப் பசளை உரிய நேரத்திற்கு கிடைக்காமையினால் பசளை இன்றியே பயிர்செய்கை நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

இதன் பின்னர் பசளைகள் வழங்கப்பட்டாலும் அவற்றை பயிர்களுக்கு பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்தினாலும் உரிய பலனும் கிடைக்காது.

ஆக மொத்தத்தில் விவசாயமும் விவசாயிகளும் இன்னும் ஆபத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கமானது இம்முறை இரசாயன பசைளையை உடனடியாக இறக்குமதி செய்து அவசரமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# கஞதாவளை விபத்தில் குடும்பப் பெண் மரணம்

*மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் களுதாவளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார் எனக் களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர் களுதாவளை பிரதான வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய - 3 பிள்ளைகளின் தாயான - மணலசேகரம் சரஸ்வதி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*மட்டக்களப்பு பக்கமிருந்து களுவாஞ்சிகுடிப் பக்கம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடந்த பெண் மீது மோதியதாலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.*

*விபத்தில் சிக்கிய பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். சடலம் தற்போது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது.*

# வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்தின் வயல்காணியை பெற்றுத்தருமாறு ஆலய பரிபாலனசபை கோரிக்கை

அபகரிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு– வடமுனை ஊத்துச்சேனை, வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்தின் வயல்காணியை பெற்றுத்தருமாறு ஆலய பரிபாலன சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு– பொலன்னறுவை எல்லைக்கிராமமான வடமுனை ஊத்துச்சேனை, வெள்ளிமலை பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான வயல்காணியை, முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்என ஆலய பரிபாலனசபை குறிப்பிட்டுள்ளது.

ஆகவே இந்த ஆலயத்துக்குச் சொந்தமான 21ஏக்கர் வயல் காணியை மீட்டுத்தருமாறு ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஆலய பரிபாலன சபையினர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது, இந்த ஆலயம் நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டதுடன் பொலன்னறுவை மாவட்டத்தில் முதல் பதிவு செய்யப்பட்ட ஆலயமாகும். மேலும், ஆலயத்தினைச் சுற்றி காணப்பட்ட ஊத்துச்சேனை, சிறிஓடை, கள்ளிச்சி ஓடை, குமாரபுர, வடமுனை ஆகிய 5 கிராமங்களில் தமிழ் சிங்கள மக்கள் வாழ்ந்துவந்தனர். இந்நிலையில் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தினால் தமிழ்மக்கள் தமது காணிகள்வீடுகளைவிட்டுவெளியேறிவாழைச்சேனைக்கும் சிங்கள மக்கள் வெலிகந்தைக்கும் இடம்பெயர்ந்தனர்.

இதனால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆலயம், மக்கள் சென்று பராமரிக்கமுடியாத நிலையினையடுத்து ஆலய கூரைகள் உடைந்து பாரிய சேதமடைந்தது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் 2010ஆம் ஆண்டு மக்கள் மீண்டும் குடியேறிய நிலையில் ஆலயத்துக்கு செல்லும் வீதி மக்கள் பிரயாணிக்க முடியாதளவு சேதமடைந்துள்ளது. ஆலயத்துக்கு முன்னாள் உள்ள ஆற்றிற்கு மறுபக்கம் 1926ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதியுடனான 21 ஏக்கர் வயல்காணியாகும். இந்த காணியை 2010ஆம் ஆண்டு முஸ்லிம் இனத்தைச்சேர்ந்த ஒருவர் தனது காணி என காணிபத்திரத்தை கொண்டு அபகரித்து வேளாண்மை செய்துவருகின்றார்.

இந்த ஆலயத்துக்குச் சொந்தமான காணியை பெற்றுத்தருமாறு கிரான் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தோம். அதற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை.

அதேவேளை கடந்த மாதம் அந்த வயல்காணியை ஆலய நிர்வாகம் வேளாண்மை செய்வதற்காக உழுது, நெல்லை பயிரிட்டது. 21 நாள்களின் பின்னர் குறித்த நபர் உழவு இயந்திரம் கொண்டு அந்த வேளாண்மை பயிரை அழித்தார்.ஆகவே ஆலயத்துக்குச் சொந்தமான இந்த வயல்காணியை உரிய அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பிளே ஓவ் சுற்றுக்குள் நுழைந்தது ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி

ஐ.பி.எல். தொடரின் நேற்றைய நாள் போட்டிகளில் முதலாவதில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பஞ்சாப் கிங்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. க்ளென்மக்ஸ்வெல் 57 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 40 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். பஞ்சாப் அணியின் மொஹமட் ஷமி மற்றும் ஹென்ரிக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து நிலையில் 158 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிய, பெங்களூர் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பஞ்சாப் அணியின் மயங் அகர்வால் 57 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 39 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் யுஸ்வேந்திர சஹால் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மக்ஸ்வெல் தெரிவுசெய்யப்பட்டார். இந்தப்போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் பெங்களூர் அணி மூன்றாவது அணியாக அடுத்த சுற்றான பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

# ஹைதராபாத் அணியை வீழ்த்தியது கொல்கத்தா புள்ளிப்பட்டியலில் நான்காவது இடத்தில்



ஐ.பி.எல். தொடரின் நேற்றையதினத்துக்கான இரண்டாவது போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணியும் விளையாடியிருந்தன.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசஸ் ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. வில்லியம்சன் 26 ஓட்டங்களையும் அப்துல் சமாட் 25 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். கொல்கத்தா அணியின் டிம் சவுத்தி, சிவம் மாவி மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றி இலக்கையடைந்தது.

சுப்மன் கில் 57 ஓட்டங்களையும் நிதிஷ் ரணா 25 ஓட்டங்களையும் எடுத்தனர். ஹைதராபாத் அணியின் ஜேஸன் ஹோல்டர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சுப்மன் கில் தெரிவுசெய்யப்பட்டார்.




# அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ் மார்க் மார்க்யுஸ் முதலிடம் பெற்றார்!

மோட்டோ ஜிபி தொடரின் அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், நடப்பு சம்பியனான ஹொண்டா அணியின் மார்க் மார்க்யுஸ் முதலிடம் பிடித்துள்ளார்.

மோட்டோ ஜிபி பந்தயம், ஆண்டுக்கு 19 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெற்றுவருகின்றது. இந்த ஆண்டின் 15ஆவது சுற்றான அமெரிக்காஸ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம் நேற்று அமெரிக்காஸ் சர்வதேச ஓடு தளத்தில் நடைபெற்றது.

நடப்பு சம்பியனான ஹொண்டா அணியின் மார்க் மார்க்யுஸ், பந்தயத் தூரத்தை 41 நிமிடங்கள், 41.435 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண்டார். யமஹா அணியின் பெபியோ குவர்டரோ, 4.679 வினாடிகள் பின்னிலையில் பந்தயத் தூரத்தை கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்ததோடு அதற்கான 20 புள்ளிகளையும் பெற்றார். இவரையடுத்து, டுக்கார்டி அணியின் பிரன்செஸ்கோ பக்னியா, 8.547 வினாடிகள் பின்னிலையில் பந்தயத்தூரத்தைக் கடந்து மூன்றாவது இடத்தைப் பிடித்து, 16 புள்ளிகளையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இதுவரை நடந்து முடிந்துள்ள 15 சுற்றுப்போட்டிகளின் அடிப்படையில், யமஹா அணியின் பெபியோ குவர்டரோ ஐந்து வெற்றிகளோடும் 254 புள்ளிகளுடனும் முதலிடத்தில் உள்ளார். டுக்கார்டி அணியின் பிரன்செஸ்கோ பக்னியா இரண்டு வெற்றிகள், 202 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், சுசூக்கி அணியின் ஜோன் மிர், 175 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பதினாறாவது சுற்றான எமிலியா ரொமக்னா கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 24 ஆம் திகதி மார்கோ சிமோன்செல்லி சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

# ரி-20 உலகக்கிண்ணத்தொடருக்கான ரிக்கெட் விற்பனை ஆரம்பமானது

*இந்த ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான ரிக்கெட் விற்பனை நேற்று முதல் ஆரம்பமாகியிருப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.)தெரிவித்துள்ளது.*

*16 நாடுகளின் கிரிக்கெட் அணிகள் பங்குபெறுகின்ற ஏழாவது ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் போட்டிகள் இம்மாதம் 17ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 14ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்திலும் மற்றும் ஓமானிலும் நடைபெறுகின்றன. மொத்தமாக 45 போட்டிகள் நடைபெறவுள்ளதோடு ஒவ்வொரு போட்டிக்குமான ரிக்கெட்டுக்களையும் ஐ.சி.சியின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் ஒன்றான* https://www.t20worldcup.com/tickets *இல் கொள்வனவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.*

*கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில், இந்த ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்காக நடைபெறவுள்ள போட்டிகள் அனைத்தினையும் பார்வையிட அபுதாபி மைதானத்தின் சிறப்பு பார்வையாளர் வசதி உள்ளடங்கலாக 70% பார்வையாளர்களுக்கும், ஓமானில் போட்டிகள் நடைபெறும்போது அதனை மைதானத்தில் 3,000 பார்வையாளர்கள் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*



# கொழும்பின் 13 ஏக்கர் நிலத்தை வெளிநாட்டுக்கு விற்கத் திட்டம்

## தலதா அத்துகோரல எம்.பி. சாடல்



நாட்டின் ஆட்சியாளர்கள், ராஜபக்ஷ என்ற பெயரைச் சீரழித்துள்ளனர். கொழும்பு துறைமுகத்தில் உள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பைச் சீன நிறுவனத்துக்குவிற்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம் பெறுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசாங்கம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி உடனடியாக நாரஹேன்பிட பொருளாதார மத்திய நிலையத்துக்குச் சென்று அரிசி பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முதல் வர்த்தமானி அறிவித்தலை விடுத்தார். அதுவே கோட்டாபய ராஜபக்ஷ பின்னோக்கிச் சென்ற வர்த்தமானியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய, பத்து அம்ச கொள்கைத் திட்டத்தை முன்வைத்தார். ஆனால் தற்போது மக்கள் அவற்றோடு அவரையும் விரட்டியடிக்கின்ற நிலையில் இருக்கின்றார்கள். அதில் முதலாவது அம்சம் பாதுகாப்பு சம்பந்தமானது.

இரண்டாவது சீரமைக்கப்படாத நட்பு ரீதியான மற்றும் வெளியுறவுக் கொள்கையாகும். யுகதனவி எரிசக்தி நிலையம் நடுராத்திரியில் அமெரிக்க நிறுவனத்துக்கு விற்கப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சரவையில் இருக்கின்ற எரிசக்தி அமைச்சருக்குக் கூட இது தெரியாமல் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விசேட செயற்றிட்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே கைச்சாத்திட்டுள்ளனர். இதில் உள்ளடங்கிய விடயங்கள் அவர்களுக்கு மாத்திரமே தெரியும். எதிர்காலத்தில் பிறக்கின்ற குழந்தையொன்றுக்குக் கூட ராஜபக்ஷ என்று பெயர் சூட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திறைசேரியிடம் காணப்பட்ட 50 வீத உரிமத்தில் 40 வீதம் இதன்போது விற்கப்பட்டுள்ளது. தற்போது கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு விற்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதா? கொழும்பு துறைமுகத்தில் உள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பைச் சீன நிறுவனத்துக்கு விற்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம் பெறுகின்றன.

இந்தியாவுக்கு மேற்கு முனையம் வழங்கப்படுகின்றது என்றவுடன், சீனாவைச் சமாளிப்பதற்காக இந்த நிலப்பரப்பை வழங்குவதற்கு முயற்சிக்கின்றார்கள். இதுதானா வெளிநாட்டுக் கொள்கை. நாட்டையும், நாட்டு வளத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறியவர்கள் இப்படித்தானா நாட்டைப் பாதுகாக்கின்றார்கள்? என தலதா அத்துகோரல கேள்வி எழுப்பியுள்ளார்.

# நல்லாட்சிக்கு ஏற்பட்ட நிலைமை ஜனாதிபதி கோட்டாவுக்கும் வரும்

## கனியவள தொழிற்சங்கம் எச்சரிக்கை

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்திய நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்கும் கொள்கையுடன் ஜனாதிபதி செயற்பட்டால் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என கனிய எண்ணெய் மற்றும் சேவை சங்கத்தின் தலைவர் பந்துல சமன் குமார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 101 குதங்களை கொண்டதாக திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டன. கனிய எண்ணெயை சேமிக்கும் பிரதான தாங்கியாக திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் காணப்பட்டன.

1987 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனாவிற்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கி விவகாரத்தில் இலங்கை இந்தியாவை தவிர்த்து ஏனைய நாடுகளுடன் தொடர்புகொள்ளக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சிக் காலத்தில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளில் 99 தாங்கிகள் இந்திய நிறுவனத்திற்கு 35 வருட கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டன. இலங்கையின் கனிய எண்ணெய் விநியோகத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் ஐ.ஓ. சி. நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 99 எண்ணெய் தாங்கிகளில் 15 தாங்கிகளை இந்திய நிறுவனம் பயன்படுத்துகிறது.

2003 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை திருத்தி புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டன. புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைய ஐ.ஓ. சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 15 தாங்கிகளைத் தொடந்து அந்நிறுவனத்திற்கு வழங்கவும், 10 தாங்கிகளை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கவும், மிகுதி 74 தாங்கிகளை இந்திய நிறுவனமும், கனிய எண்ணெய் கூட்டுத்தாபனமும் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்யவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் அப்போதைய அரசாங்கம் ஒப்பந்தத்தை கைச்சாத்திடவில்லை.

இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்தின் வசமுள்ள தாங்கிகளில் 85 தாங்கிகளை முழுமையாகவும், 16 தாங்கிகளைப் பகுதியளவிலும் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. 2003 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்னர் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட முயற்சிப்பது ஏற்புடையதல்ல, பெருமளவிலான தாங்கிகளை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் வசம் வைத்துக்கொள்வதை விடுத்து இந்திய நிறுவனத்துக்கு மீண்டும் அனைத்து உரிமைகளையும் வழங்க முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசாங்கம் கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தை திருத்தியமைக்க தீர்மானித்துள்ளது. சட்டம் திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் கனிய வள கூட்டுத்தாபனத்தை தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான நோக்கம் அரசாங்கத்திடம் உள்ளது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. – என்றார்.

# கொழும்பில் கால் பதித்துள்ளார் ஆசியாவின் 2 ஆவது பணக்காரர்



கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி தொடர்பில் அண்மையில், ஒப்பந்தம் செய்து கொண்ட இந்திய தொழிலதிபர் கௌதம் அதானி, தற்போது ஆசியாவின் இரண்டாவது பணக்காரர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி, தொடர்ந்தும் 10 ஆவது முறையாகவும் ஆசிய பணக்காரர்களில் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், கடந்த ஒரு வருடத்தில் அதானியின் செத்துமதிப்பு 1.04 லட்சம் கோடியிலிருந்து 5.05 லட்சம் கோடியாக நான்கு மடங்கு அதிகரித்துள்ளது என்று ஆராய்ச்சி நிறுவனம் ஹுருன் இந்தியா தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக அதானி குழுமம் அதன் உள்ளூர் பங்குதாரர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையுடன் ஒரு பில்ட்–ஒபரேட்–டிரான்ஸ்பர் ஒப்பந்தத்தில் அண்மையில் கையெழுத்திட்டது.

ஹுருன் இந்தியாவின் பணக்கார பட்டியல்படி, 2021 அதானி குழுமத்தின் ஒருங்கிணைந்த சந்தை மூலதனம் அல்லது பங்குகளின் மொத்த மதிப்பு 9 லட்சம் கோடி ரூபாவாகும்.

சீனாவில் உள்ள தண்ணீர் போத்தல் நிறுவனமான நோங்ஃபு ஸ்பிரிங் நிறுவனத்தின் நிறுவுனர் ஜாங் ஷான்னை முந்தி அதானி ஆசிய பணக்காரர்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அதானியின் சகோதரர்கள் வினோத் சாந்திலால் அதானியும், ஆசியாவின் முதல் 10 இடங்களில் 12 இடங்கள் முன்னேறி 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு 1.31லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

# ஆசன எண்ணிக்கைக்கு மேலாக பயணிகளை ஏற்றிச்செல்லுகின்ற பஸ்களுக்கு எச்சரிக்கை

ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாக பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களை மறு அறிவித்தல் வரை பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பஸ்களின் அனுமதிப்பத்திரங்களை ரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தனியாருக்குச் சொந்தமான பஸ்கள் பயணிக்கும் அளவு ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிடார். கொரோனாத் தொற்று நிலை காரணமாக வேறு தொழில்களை நாடிச்சென்றுள்ள பஸ் சாரதிகள் மீண்டும் தொழிலுக்கு திரும்பாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# இலங்கைப் பயணிகளுக்கான கட்டுப்பாட்டை தளர்த்தியது கட்டார்

இலங்கையிலிருந்து பயணிப்போர் தொடர்பில் அமுலிலிருந்த பயணக்கட்டுப்பாடுகளைக் கட்டார் தளர்த்தியுள்ளது.

இரண்டு டோஸ் தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்ட இலங்கைப் பயணிகள், கட்டாருக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படுகின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் இந்தப் பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படுகின்றது.

கட்டார் சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி முழுமையாகச் செலுத்திக் கொண்டவர்கள் இரண்டு நாள்கள் ஹோட்டல் தனிமைப்படுத்தலின் பின்னர் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட உள்ளனர். இவ்வாறான பயணிகளுக்குக் கட்டாரில் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட உள்ளது. கட்டாருக்குப் பிரவேசிக்க 72 மணித்தியாலங்களுக்குள் இந்தப் பயணிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்பட்டு அதில் எதிர்மறையான பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2021இல் வெளியிடப்பெற்றது.